உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. | விக்கிரம ஹு பங்குனி மீ 1௨ | இதழ் 12. No 12.

மார்ச்சு - 1941

திருப்புகழ்.

திருவேரகம் (சுவாமிமலை)

தெருவினில் நடவா மடவார்
திரண்டொ றுக்கும் வசையாலே
தினகர னெனவே லையிலே
சிவந்து திக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா
மதன் றொடுக்கும் கணையாலே
புளகித முலையா ளலையா
மனஞ் சலித்தும் விடலாமோ
ஒருமலை யிருகூ றெழவே
யுரம்பு குத்தும் வடிவேலா
ஒளிவளர் திருவே ரகமே
யுகந்து நிற்கும் முருகோனே
அருமறை தமிழ்நூ லடைவே
தெரிந்து ரைக்கும் புலவோனே
அரியரி பிரமா தியர்கால்
விலங்க விழ்க்கும் பெருமாளே.

பதவுரை:

ஒருமலை - மாயையில் ஒப்பற்ற கிரௌஞ்ச மலையானது, இருகூறு எழவே - இரண்டு கூறுகளாகப் பிளவு பட்டழியுமாறும், உரம் புகுத்தும் - தாரகன் மார்பு பிளக்குமாறும் செலுத்திய, வடி வேலா - கூர்மை பொருந்திய வேற்படையை யுடையவரே! ஒளிவளர் - மிகுந்த ஒளிபெற்று விளங்கும், திரு ஏர் அகமே - சுவாமிமலை யென்னுந் திருத்தலத்திலே, உகந்து நிற்கும் - மகிழ்ந்து எழுந்தருளி யிருக்கும், முருகோனே - முருகக் கடவுளே! அரு மறை - அருமையாகிய வேதங்களையும், தமிழ் நூல்களையும், அடைவே - முறையாக, தெரிந்து உரைக்கும் - மக்களின் தகுதிக்குத் தக்கவாறு தெரிந்து உரைத்தருளிய, புலவோனே - சிவஞானச் செல்வரே! அரி - இந்திரன், அரி - திருமால், பிரம ஆதியர் - பிரமன் முதலியோருடைய, கால் விலங்கு அவிழ்க்கும் - சூரபன்மன் காலிற் பூட்டிய விலங்கினை அவிழ்த்து அருள் புரிந்த, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! தெருவினில் நடவா - தெருவினில் உல்லாசமாக நடக்கும், மடவார் திரண்டு - பெண்கள் கூடி, ஒறுக்கும் வசையாலே - குறைத்துக் கூறும் வசைச் சொற்களாலும், தின கரன் என - சூரியன் என்று சொல்லும்படி ஒளியுடனும் வெப்பத்துடனும், வேலையிலே - கடலினிடத்தே, சிவந்து உதிக்கும் மதியாலே - சிவந்த நிறத்துடன் உதிக்கின்ற சந்திரனாலும், பொருசிலை வளையா - போருக்குரிய கரும்பு வில்லை வளைத்து, இளையா - இளைக்காதவனாகிய, மதன் தொடுக்கும் கணையாலே - மன்மதன் தொடுக்கும் மலர்க்கணையினாலும், புளகித முலையாள் - விரகதாபத்தால் விம்முகின்ற முலையுடையவளாகிய என்னை, அலையா - கணவனாகிய தேவரீரை யின்றி அலையுமாறு, மனஞ்சலித்தும் விடலாமோ - உள்ளம் உடைந்து கலங்குமாறு விட்டு விடுதல் முறை யாகுமோ?

பொழிப்புரை.

மாயையில் நிகரற்ற கிரௌஞ்ச மலையும், தாரகனுடைய மார்பும் பிளக்குமாறு விடுத்தருளிய வேலாயுதக் கடவுளே! ஒளியினால் விளங்கும் திருவேரக மென்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுளே! வேதங்களையும் தமிழ் நூல்களையும் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்குத் தக்கவாறு உரைக்கும் பரிபூரண ஞான சிகாமணியே! இந்திரன் மாயனாதி வானவர்களுடைய காலில் சூரபன்மன் பூட்டிய விலங்கைத் தறித்து சிறையினின்றும்

நீக்கி ஆட்கொண்ட பெருமையின் மிக்கவரே! தெருவினில் உலாவும் பெண்கள் கூடி கொடிய வசைமொழிகளைச் சொல்லித் துன்புறுத்துவதனாலும், சூரியனைப் போல் வெம்மையுடன் கடலில் உதிக்கின்ற சந்திரனாலும், போருக்கு வில்லை வளைத்து இளைக்காதவனாகிய மன்மதன் விடுகின்ற மலர்க்கணையாலும், விரகவேதனையுற்று விம்முகின்ற தனங்களை யுடையவளாகிய யான் உம்மைத் தழுவி மகிழும் பேறு இன்றி அலைந்து மனஞ் சலிக்க விட்டுவிடுவது முறையாகாது.

விரிவுரை.

தெருவினில் நடவா மடவார்:—

தெருவினில் நாணமின்றி நடக்கும் பெண்களாவார் பொது மகளிர்; அவர்கள் இளைஞரைத் தங்கள் கூந்தலாகிய காட்டில் கண்ணென்ற வலையை வீசிப் பிடிக்கும் பொருட்டு தெருவினில் எந்நேரமும் உலாவிக் கொண்டிருப்பர். அவர்கள் கற்புடைய மகளிரை எள்ளி நகையாடுவர்.

இத் திருப்புகழ் நாயகி நாயக பாவமாக அமைந்துளது. மாதர்கள் திரண்டு வந்து "ஸ்ரீ முருகன் மீது காதல் கொண்டு பெற்ற பயன் யாது? இதுவரையிலும் ஒருபயனும் பெற்றாயில்லையே" என்று வசை கூறுவர்.

தினகர னெனவே.........மதியாலே:—

காதல் நோயுற்றோருக்குப் பூரணசந்திரன் வெப்பமாகத் துன்புறுத்துவன், இராமனைக் கன்னிமாடத்தில் நின்று கண்டு விரகமுற்ற சீதாதேவி சந்திரனைக் கண்டு வருந்துவதாகக் கூறும் கம்பர் வாக்கையும் உன்னுக.

சொடியை யல்லலை யாரையுங் கொல்கிலாய்
மடுவி லின்னமு தத்தொடும் வந்தனை
பிடியின் மென்னடைப் பெண்ணொடென் முலைனைச்
சுடுதியோ கடற் றோன்றிய திங்களே.

"பட்டுப்படாத மதனலும்
பக்கத்து மாதர் வசையாலும்
சுட்டுச் சுடாத நிலவாலும்
தக்கத்திலாழ்வ தியல்போதான்"

—திருப்புகழ்.

சூரியனைப் போலவும், வடவாமுகாக்கினியைப் போலவும், பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தைப் போலவும் சந்திரன் சுடுகின்ருன் என்று பிறிதோரிடத்திலும் சுவாமிகள் கூறுமாறு காண்க.

"இரவியென வடவையென ஆலால விடமதென
உருவுகோடு ககனமிசை மீதேகி மதியும்வர"

பொருசிலே......கணையாலே:—

மன்மதன் கரும்பு வில்லை வளைத்து சுரும்பு நாணேற்றி மலர்க்கணையைத் தொடுத்து எத்தகைய திடமுள்ள தவத்தின ரையும் மயக்க வல்லவன்.

ஒளிவளர் திருவேரகம்:—

திருவேரகத்தில் அகத்திருளை நீக்கவல்ல ஞான ஒளி வீசுகின்றது.

அருமறை தமிழ் நூலடைவே:—

முருகவேள் திருஞான சம்பந்தர் திருவாக்கிலிருந்து அரிய வேதங்களின் சாரங்களை தமிழ் நூலில் அடையுமாறு தெரிந் துரைத்தனர் எனினுமமையும்.

அரியரி......விலங்கவிழ்க்கும்:—

மாலயனாதி வானவர்க்கு சூரபன்மன் தளையிட்டு வருத்த அதனை முருகவேள் நீக்கி யாட்கொண்ட அரிய வரலாற்றைக் கந்த புராணத்தா லறிக.

ஓம் குஹாய நம.

கந்தரலங்காரம்

(258 ம் பக்கத் தொடர்ச்சி.)

(25) தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த கா! வந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

பதவுரை.

அந்தகா - கூற்றுவனே, செந்தில் - திருச்செந்தூர் என்னுந் தலத்தில் எழுந்தருளியுள்ள, வேலனுக்கு - வேற்படையை யுடைய முருகக் கடவுளுக்கு, தொண்டு ஆகிய - அடிமையாகிய, என் - அடியேனுடைய, அவிரோத ஞானம் - ஞானமாகிய, சுடர் வடி வாள் - ஒளி பொருந்தியதும் கூர்மையுடையது மாகிய வாளாயுதத்தை, கண்டாயடா - பார்த்தாயடா, என் கைக்கு - எனது கரத்திற்கு, எட்ட - எட்டுகின்ற அளவில், சற்று வந்து பார் - சிறிது நீ வந்து பாராய், தண்டு ஆயுதமும் - (அப்படி வந்தாயாயின்) உன்னுடைய கதாயுதமும்

கருத்துரை.

குன்றெறிந்த குமர! திருவேரகத் தெய்வமே! செந்தமிழ்ப் புலவ! தேவர் சிறை தீர்த்த தேவ தேவ! பெண்கள் கூறும் வசையாலும் திங்களாலும், மதனன் கணையாலும் துன்புற்று நான் வருந்தா வண்ணம் தேவரீர் மணந்து கொண்டு இன்பத்தைத் தருவீர்.

திரிசூலமும் - முத்தலைச் சூலமும், விழ - உன் கையிலிருந்து பொடிபட்டுச் சிந்த, உன்னை தாக்கி - உன்னை மோதி, திண்டாட - வலியழிந்து வருந்துமாறு, வெட்டி விழ விடுவேன் - தண்டித்து உன்வை வீழ்த்துவேன்.

விரிவுரை.

தண்டாயுதமும் திரிசூலமும்:—

இயமனுடைய கரத்திலுள்ள ஆயுதங்களில் இவை சிறந்தவை. கூற்றுவன் புண்ணிய சிலர்கட்கு அருளுருவுடனும்' பாவிகட்கு தண்டு, சூலம், பாசக்கயிறு முதலியவைத் தாங்கிக் கொண்டு தழற்பொறி சிந்துங் கண்ணுடன் கோரவடிவுடனும் தோன்றுவன்.

திண்டாட வெட்டி விழவிடுவேன்:—

கந்தவேள் திருவருட் குரியார் இயமனை வெல்வர். காலனுக்கு ஒருபோதும் அஞ்சார்.

வேண்டா மடாகாலா வேலா யுதப்பெருமான்
ஆண்டுகொண்ட தென்னை யறியாயோ—நீண்டாதே
அப்புறத்தே போடா அறுமுகவன் கண்டக்கால்
தப்பாமற் கொல்வான் க்ஷணம்.

'நாமார்க்குங் குடியல்வோம் நமனையஞ்சோம்''

என்ற திருவாக்குகளை யுன்னுக.

செந்தில் வேலவன்:—

சூராதி யவுணர்களைக் கொல்லும் பொருட்டு எழுந்தருளியிருந்த திருச்செந்தூர் வேலாயுதக் கடவுளுக்கு நான் தொண்டனா யிருப்பதால், மிகுந்த போராற்றலுடையேன் என்பது குறிப்பு. தொண்டால் ஆகிய என்பது மூன்றும் வேற்றுமைத் தொகையாகி, தொண்டாகிய என்றுயிற்று.

அவிரோத ஞானச் சுடர்வடிவாள்:—

ஞானம் அஞ்ஞான மாகின்ற காட்டை அழிக்கின்றது ஆதலால் வாள் என்றனர். ஆணவ இருளை யழிப்பதால் சுடர் வாள் என்றும், கூர்மையாக இருப்பதால் வடிவாள் என்றும் அழகாக உரைப்பாராயினர். ஞானம் கூர்மையாக இருக்க வேண்டும். "கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கே" என்பது மணிவாசகம். அவிரோதம் என்பது விரோத மில்லாமை. எல்லாந் தானகவும், எனதும் யானும் வேருகவும் ஆகி நிற்கும் நிலையில் விரோதபாவம் இல்லாமலழிகின்றது. தான் என்பது தொலைந்தது; எல்லாம்தானகி விட்டது; அந்த நிலையில் விரோதம் எங்கிருந்து வரும்? யார் மேல் விரோதிப்பது; எல்லோரும் யாவும் தானக நிற்கும் நிலையில் எவ்வளவு சாந்தம்; எவ்வளவு அமைதி; அன்பர்கள் சற்று ஆழ நினையுங்கள்; அது எத்துணை உயர்ந்த நிலை. அது மனத்தில் நினைப்பதற்குக் கூட முடியாத அத்துணைச் சிறந்த நிலை.

"எனதி யானும் வேருகி எவரும் யாதும் யானகும்
இதய பாவ னதீதம் அருள்வாயே.
—திருப்புகழ்

"எல்லாமற என்னையிழந்த நலம் சொல்லாய்"
"யானகிய என்னை விழுங்கி வெறும்"
தானய் நிலைநின்றது தற்பரமே" —அநுபூதி.

இத்தகைய தடைபடாத ஞானமாகிய வாள் ஒன்றே இயமனை வெல்ல வல்லது.

அந்தகா:—

அந்தகன் - இயமன். மார்க்கண்டேயரைப் பற்ற வந்த காலத்து சிவாலயத்தைக் கண்டு வணங்காமையால் கூற்றுவனுக்கு இப் பெயருண்டாயிற்று.

வந்துபார் சற்றென்கைக் கெட்டவே:—

அருணகிரியார் இணையற்ற வீரராக இருப்பதனால் யாவரையும் அடக்கவல்ல இயமனை, "சிறிது கைக்கு எட்டுந் தொலையில் வந்துபார்; நின் கதி அதோகதிபாக்கி விடுகின்றேன்; என்று அறைகூவி யழைக்கின்றார்.

"வாராதக லந்தகா வந்தபோதயிர் வாங்குவனே"

"சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே"

செந்திற் பெருமானை மனமொழி மெய்களால் வழிபட்டு அவிரோத ஞானவாளைப் பெற்றோர்க்கு யாதும் பயமில்லை என்பது தேற்றம்.

கருத்துரை.

இயமனே! செந்திலாண்டவன் திருவடித் தொழும்பினாற் கிடைத்த அவிரோத ஞானச் சுடர் வடிவாள் என் கையிலுள்ளது. ஆதலால் என்னை அணுகாதே; அணுகினால், அழிகுவை.



அடுத்த ஆண்டு முதல் சந்தா ரூ 1-4-0 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஓம் குஹாய நம:

சிவாநந்தலஹரீ

(259-வது பக்கத் தொடர்ச்சி)

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(72) த்[4]யாநாஞ்ஜநேந ஸமவேக்ஷ்ய தம:ப்ரத[3]ேசம்
பி[4]த்வா மஹாப[3]லிபி[4]ரீச்வரநாமமந்த்ரை:!
தி[3]வ்யாச்ரிதம் பு[4]ஜக[3]பூ[4]ஷணமுத்[3]வஹந்தி
யே பாத[3]பத்[3]மமிஹ தே சிவ தே க்ருதார்தா[2]:!!

பதவுரை:

சிவ — சிவபெருமானே!
யே — எவர்கள்
த்யாநாஞ்ஜநேந — தியானமாகின்ற மையினாலே
ஸமவேக்ஷ்ய — நன்றாயறிந்து
ஈச்வர நாம மந்த்ரை: — சிவமூர்த்தியினுடைய நாமமந்திரங்களாகின்ற
மஹாபலிபி: — உயர்ந்த உபகரணங்களினால்
தம: ப்ரதேசம் — அஞ்ஞானமாகின்ற புதையலை மறைத்துக்கொண்டு இருக்குமிடத்தை
பித்வா — பிளந்து
திவ்யாச்ரிதம் — தேவர்களாலடையப்பட்டதாயும்
புஜக பூஷணம் — நாகத்தை ஆபரணமாக உடையதாயுமிருக்கின்ற
தே — உன்னுடைய
பாதபத்மம் — திருவடித் தாமரையை
இஹ — இந்தப் பிறப்பில்
உத்வஹந்தி — அடைகின்றார்களோ (எடுத்து அநுபவிக்கின்றார்களோ)
தே — அவர்கள்
க்ருதார்தா: — பாக்கியசாலிகள்.

பொழிப்புரை.

ஓ சிவபெருமானே! தியானமாகின்ற மையினால் நன்றாயறிந்து, தேவரீருடைய மந்திரத்தாற் செய்யும் பலியினால் அஞ்ஞானமாகிற இடத்தைப் பிளந்து, தேவாதிகள் வணங்குந் தேவரீருடைய பாதபத்மமாகின்ற புதையலை எவர்கள் இந்தப் பிறப்பில் அடைகின்றார்களோ அவர்கள் பிறப்பின் பயனை யடைந்தவர்களாவார்கள்.

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(263-வது பக்கத் தொடர்ச்சி)

அக்கினிமுகன் இறந்தமையையும், சூரபன்மன் துன்புறுவதையும், அவனுடைய புதல்வர்களாகிய மூவாயிரருங் கேட்டு தந்தையினுடைய கோயிலையடைந்து தந்தையை வணங்கி 'பிதாவே! இலக்கத் தொன்பான் வீரரிடம் அக்கினி முகனாகிய ஒருவனை யனுப்பினாய்; மெலியராயினும் பலர் கூடினால் வலியரையும் வெல்லுவர்; இதனை நீ யறியாயோ? அக்கினிமுகன் இறந்ததற்காக வருந்தாதிர்; நாங்கள் போய் பூதரையும் வீரரையுங் கந்தனையும் வென்று வருவோம்; மாலயனாதி வானவரையுஞ் சிறை செய்வோம்; எம்மை ஏவுதி" என்றார்கள். சூரபன்மன், "நன்று" என்று விடைதந்தான். மூவாயிரர் போர்க்கோலங்கொண்டு, படைகளை எடுத்துக் கொண்டு போர்ப்பறை யறைவித்துக் கொண்டு, எண்ணில்லாத சேனைகளுடன் போர்க்களத்தை யடைந்தார்கள். அமரர்கள் அஞ்சி ஓடினார்கள். பூதரும் அசுரரும் பொருதார்கள். அசுரர் பலர் மாண்டனர்; உதிர ஆறு ஓடிற்று. பூதரினும் பலர் மாண்டனர். மூவாயிரர் வெகுண்டு சரமழை பொழிந்தனர். பூதர் இரிந்தனர். பூதகணத் தலைவர் அதுகண்டு கோதிப்புற்று வில் வளைத்து யுகமுடிவில் இடி சொரிந்தாற்போல கனல்பொழியுங் கணைகளைச் சொரிந்தனர் மூவாயிரர் எதிர்த்து பற்பல தெய்வப் படைக்கலங்களை விடுத்து அமர்புரிய பூதகணத் தலைவர் மனம் வருந்தி நின்றார்கள்.

அதனைக் கண்ட இலக்கம் வீரர்களுள் ஆயிர வீரர்கள் உள்ளம் கொதித்து, வீரவாகு தேவரிடம் விடை பெற்று, கந்தக் கடவுளைத் தியானித்து, மூவாயிரரை எதிர்த்துப் போர் புரிந்தனர். மூவாயிரர் ஆயிரவர் தேரை அழித்தனர்; ஆயிரவர்

மூவாயிரருடைய விற்களையும் தேர்களையும் சேமத்தேர்களையும் அழித்துப் பூமியில் நிற்குமாறு செய்து, வேறு தேர்களிலேறிச் சூழ்ந்து கணைகளைச் சொரிந்தனர். சிலர் இரிந்தார்; சிலர் களைத்தார். இருதிறத்தாரும் இவ்வாறு பொருது ஆயிரவரில் விஜயரைத் தவிர ஏனையோர் வலியிழந்து தோற்றார்கள்.

விஜயர் "இம் மூவாயிரவரையும் யானே கொல்வேன்" என்று வஞ்சினங் கூறி, சிவபெருமான் கொடுத்த அழியாத வில்லையெடுத்து வளைத்து மூவாயிரவர் மேல் பாண மழைகளைச் சொரிந்தார். பலருடைய கைகளை யறுத்தார்; சிலருடைய கால்களையறுத்தார்; சிலருடைய மார்புகளை யறுத்தார்; சிலர்களுடைய தலைகளை யறுத்தார். அற்ற உறுப்புக்கள் பிரமதேவர் தந்த வரத்தின்படி மீண்டும் வந்து கூடின. உணர்வும் உயிரும் நீங்கிய அவர்கள் எழுந்து விஜயரைச் சூழ்ந்து மலைகளைப் பொழிந்தார்கள். மீண்டும் விஜயர் பன்முறை அவர்களுடைய அவயவங்களை யறுத்தும் பொருந்திக் கொண்டே யிருந்தன. அதனைக் கண்ட விஜயர் திகைத்து, "இனி என் செய்வேன்? இவரைக் கொல்லும் உபாயம் யாது? முருகன் திருவடியே இங்கு துணை" என்று எண்ணி, கந்தவேள் கழலிணைக் கஞ்சங்களைக் கருதி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்றார். அருள் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் அவர் முன் தோன்றி வைரவப் படைக் கலந் தந்து மறைந்தருளினார். விஜயர் மனமகிழ்ந்து அப் படைக்கலத்தைப் பூசித்து விடுத்தார். அது சென்று மூவாயிரவரையும் ஒரு கணப் பொழுதில் அழித்து மீண்டது. தேவர்கள் விஜயர் மேல் பூ மழை பொழிந்தனர். தூதுவர் ஓடி சூரபன்மனிடம் இதனைத் தெரிவித்தார்கள். சூரன் கேட்டு நிலத்தில் வீழ்ந்து புலம்பினான். சூரியன் அஸ்தமித்தான்.

தருமகோபன் என்ற மந்திரி சூரபன்மனிடம் சென்று வணங்கி, தானவேந்திர! வருந்தற்க; வீரர்கள் எதற்கும் அஞ்சுதல் கூடாது. நீ வருந்தினால் தேவர் நகைப்பர். உடலைப் படைத்தத்தர பிரமனுளன்; உயிரைத் தர நமனுளன்; நம் வலியுளது.

இறந்தோர்கட்காக ஏன் இரங்கவேண்டும்? "நீர் இருத்தி யான் போய் பகைவர்களைக் கொல்வேன்" என்று கூறி, அவன் பால் விடை பெற்று, புண்டரிகம் என்ற திக்கியானை மீதூர்ந்து, பற்பல படைக்கலங்களைத் தாங்கி, போர் முரசறைய அவுண சேனைகளும் அமைச்சரும் சமுத்திரம் போல் சூழப் போர்க் களத்தை யடைந் தான். தேவர்கள் "இவனை வெல்வதரிது" என்று அஞ்சியோடினர். இருதிறப் படைகளும் எதிர்த்துப் போராடின. பூதரும் மாண் டனர்; அவுணர் அழிந்தனர். இலக்கம் வீரரும் போர் செய்து இளைத்தனர். வீர மார்த்தாண்டர் எதிர்த்து, தருமகோபனுடன் வந்த அமைச்சர்கள் அனைவரையுங் கொன்று அவுண சேனைகளையு மழித்தார்.

தருமகோபன் அது கண்டு சினந்து புண்டரீகமென்ற யானையைச் செலுத்திக் கொண்டு பூதர் மேல் சாமழை பொழிய லாயினன். புண்டரிகமென்ற யானையும் காலாலும் வாலாலும் கொம் புகளாலும் பூதரைச் சின்னபின்னப் படுத்திக் கொன்று வீழ்த்தி யது. வீர மார்த்தாண்டர் வெகுண்டு எதிர்த்து அந்த யானை மீது அக்கினி அம்புகளைச் செலுத்தினர். அதனால் அதன் உடம்பு புண் பட்டு உதிரம் ஒழுக ஒரு முகூர்த்த நேரம் மூர்ச்சித்து நின்றது. தருமகோபன் அவர் நெற்றியில் நூறம்புகளை யழுத்தினன். அவர் பல்லாயிரஞ் சரங்களால் அவனை மறைத்தார். தருமகோபன் ஒரு வேலை விடுத்தான். அதனை அவர் பிளந்தனர். மீண்டும் கதாயு தத்தை விடுத்தான், அது மார்பிற் படுதலும் அவர் விம்மி வருந் தினர்.

வீரவாகுதேவர் இச்செயலைக் கண்டு மனத்தினும் விரைந்து வந்து தருமகோபனை எதிர்த்தார். தருமகோபன் வெகுண்டு சிறிதும் வெளியிடமின்றி கணைகளைச் சொரிந்து அவரை மறைத் தான். அந்த அம்புகள் அவருடைய திருமேனியிற் பட்டு இரப்பவர்க்கு ஈயாது சேர்ந்து, இரவாத செல்வர்கட்கு ஈந்த பொருள் போலப் பயனின்றி அது பழுக்கி அழிந்து வீழ்ந்தன வீரவாகுதேவர் ஒருவேலை விடுத்தார். அது தருமகோபன் விடுத்த கணைகளை யெல்லாம் அழித்துக் கொண்டு அவன்

மார்பைத் துளைத்துச் சென்றது. அவன் ஓவென்று அலறி வீழ்ந்து மூர்ச்சித்தான். புண்டரீகயானை அதையறிந்து ஆர்த்து ஓர் இருப்புலக்கையை எடுத்து வீரவாகுதேவருடைய பாகனை யடித்துக் கொன்று தேரையும் அழித்தது. வீரவாகுதேவர் அதனைக் கண்டு கோபித்து, பிறிதொரு தேரிற்பாய்ந்து தன்மீது எதிர்த்துவரும் யானையின் துதிக்கையை ஒருகரத்தாற் பற்றி மற்றொரு கையாற் கதுப்பி லடித்துத் தூக்கி அப்பாலுலகத்திற் செல்லும்படி வீசி எறிந்தார். யானை விண்ணுலகிற் சென்று மீண்டு போர்க்களத்தில் அதன்மீதிருந்த தருமகோபனுடன் விழுந்து பதை பதைத்து யானை ஒருபுறம் போயது. தருமகோபன் மூர்ச்சை தெளிந்து தண்டாயுதத்தை எறிந்தான் அதனை வீரவாகுதேவர் பொடி செய்தனர். தருமகோபன் ஒரு குலிசத்தை விடுத்தான். அதனை அவர் கையினுற் பற்றி, தருமகோபனுடைய மார்பில் அடித்தார். அவன் அடியற்ற மரம் போல் சாய்ந்தான். வீரவாகுதேவர் திருவடியால் ஒருதரம் உதைத்தார். தருமகோபன் உயிர் துறந்தான். அவுணசேனைகள் ஓடி யொளிந்தன.

முன்பு விழுந்த புண்டரீகயானை தெளிந்து தருமகோபன் மாண்டதை யுணர்ந்து மகிழ்ந்து, வீரவாகுதேவரை வணங்கி, "எம்பெருமானே! நான் திக்கஜம். இவன் இட்ட சிறையில் பல நாள் வருந்தினேன். வாகனமு மாயினேன். இவன் ஏவலை மறுத்தால் என் உயிரை வாட்டுவான். தங்களை யன்றி இவனைக் கொல்லவல்லார் யாவர்? இப்பாவியைக் கொன்று என் துன்பத்தை ஒழித்தீர்; உய்வு பெற்றேன். இனி எனக்குரிய திசையைக் காக்கச் செல்வேன்" என்று விடைபெற்று இருக்கை சேர்ந்தது. தருமகோபன் இறந்ததைத் தூதர் சூரபன்மனிடங் கூறினார்கள். சூரபன்மன் துன்பக்கடலில் மூழ்கி அறிவிழந்து ஓவியம்போல் கிடந்தான்.

(தொடரும்)

உ

ஓம் குஹாய நம:

உலோபியின் தந்திரம்

உலகத்தில் உபயோகமற்றவை ஒன்றுமில்லை. கல் கோயிலாகின்றது; கழுதை பொதிசுமக்கின்றது; எருமை நிலம் உழுகின்றது; கட்டம் பன்றிக்கு இரையாகின்றது; குட்டிச் சுவர் மறைவுக்கும் மாடுரிஞ்சவும் ஆகின்றது; துடைப்பம் சுத்தப் படுத்துகின்றது; பிணம் பலருக்குத் தானம் வாங்கித் தருகின்றது; எட்டியும் வேம்பும் மருந்துக்காகின்றன. எல்லாம் உதவுகின்றன. ஆனால் சிருட்டியில் உபயோகமில்லாப் பொருள் ஒன்றுதான். அது அஃறிணையன்று. உயர் திணையாம். உலோபி ஒருவன்தான் யார்க்கும் பயனற்றவன். தானுந் தின்பதில்லையாதலால் தனக்கும், பிறர்க்கு ஒன்று ஈயாததால் பிறர்க்கும் பயன்படாதவன்.

"இத்தகைய பயன்படாத லோபியை ஏன் படைத்தாய்?" என்று பட்டினத்தடிகள் இறைவனை வினவுகின்றார்.

"ஈயாத மனிதனை ஏன் படைத்தாய் கச்சி ஏகம்பனே"

உலோபிகள் தனக்கும் பிறர்க்கும் பயனின்றி யிருப்பதால் அவர்களைச் சிருட்டி செய்த ஈஸ்வரனுக்கும் திண்டாட்டம். "இவர்களை ஏன் படைத்தாய்?" என்று திருவெண்காடர் கேட்ட கேள்விக்குப் பதில் என்ன சொல்வது? என்று விழிக்கின்றார். இப்படி இறைவனையுந் திண்டாட விடும் பெருமை உலோபிகளுக்கே உண்டு. என்ன அதிசயம்? இந்த அற்புதப் பிண்டங்கள் தனிப்பிறவிதான். ஒரு உலோபியின் தந்திரத்தை எடுத்துக் காட்டுதும்.

ஒரு ஊரில் லோப குணமே யோருருவெடுத்து வந்தாற் போன்ற ஒரு லோபி இருந்தான். பசியால் களைத்து வாடிய ஏழை ஒருவன் அந்த லோபி வீட்டில் நுழைந்து "அம்மா! வயிறு பசிக்

கின்றது; இத்தனை சோறு கொடுங்கள்' என்றான். அறுந்த விரலுக்கு சுண்ணாம்பு தாராத அந்த லோபி வெளியே வந்து, "அப்பா! என்ன செய்யலாம் பாவம்! கடவுள் ஏழைகளைத்தான் சோதிக்கிறார். உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கின்றது. வயிறு ஒட்டிப் போயிருக்கின்றது. பாவம் நீ சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ? நீ உனக்குச் செல்வம் இருந்தால் இப்படி வந்து இந்தப் பாழும் வெய்யிலில் வீடு வீடாய் பிச்சைக்கு அலைய மாட்டாய். அப்பா! அதோ தெரிகின்ற கடைக்குப் போய் ரொட்டி வாங்கி வந்து இருவரும் உண்டு பசியாறலாம்; வா" என்று அவனை அழைத்துக் கொண்டு போய்க் கடைக்காரனைப் பார்த்து, "ஐயா! நல்ல ரொட்டி இருக்கிறதா?" என்று கேட்டான்.

கடைக்காரன் ஐயா! முதல் தரமான ரொட்டி இருக்கின்றது. வெண்ணெயைப் போல் மிருதுவாகவும் வெண்மையாகவும் இருக்கும்" என்றான். லோபி பிச்சைக்காரனைப் பார்த்து, அப்பா! உவமானத்தினும் உவமேயம் உயர்ந்தது. 'அன்னக் குவியல் மலை போல் இருந்தது' என்றால், அன்னக் குவியலைவிட மலை பெரியது என்றுதானே பொருள். அது போல் ரொட்டி வெண்ணெ போல் இருக்குமென்று இவன் சொல்வதிலிருந்து, ரொட்டியைக் காட்டிலும் வெண்ணெய் உயர்ந்தசென்று தெரிகின்றது. ஆதலால், நாம் வெண்ணெயை வாங்கிக் கொள்ளலாம்; வா" என்று வெண்ணெய்க்கடைக்கு அழைத்துப் போனான். வெண்ணெய்க் கடைக்குப் போய், "நல்ல வெண்ணெய் இருக்கிறதா?" என்று கேட்டான். கடைக்காரன், "ஐயா! புது வெண்ணெய்; பாருங்கள்; பனிக்கட்டியைப் போல் குளிர்ந்திருக்கின்றது". என்றான். லோபி, "அப்பா! இவன் சொல்வதிலிருந்து வெண்ணெய்யைவிட பனிக்கட்டி உயர்ந்ததென்று தெரிகின்றது. ஆதலால், அந்தக் கடைக்குப் போகலாம்; வா" என்று சொல்லி, பிச்சைக்காரனை அந்தக் கடைக்கு அழைத்துப் போய், "பனிக்கட்டி (ஐஸ்) இருக்கின்றதா?" என்று கேட்டான். கடைக்காரன் "ஐயா! நல்ல பனிக்கட்டி இருக்கிறது. தண்ணீரைப் போல் நன்றாகத் தெளிந்திருக்கின்றது; சரக்கைப் பார்த்து வாங்குங்கள்" என்றான்

லோபி பிச்சைக்காரனைப் பார்த்து, "அப்பா! கேட்டனையா! இவன் சொல்வதிலிருந்து தண்ணீர் உயர்ந்தது என்று தெளிவாகத் தெரிகின்றது; இனி வீட்டுக்குப் போகலாம்; வா" என்று வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், தண்ணீரைக் கொடுத்து, நல்ல தண்ணீர்; குடித்துப் பசியாறுவாய்" என்றான். பிச்சைக்காரன், "என்ன ஐயா! ஊரையெல்லாம் சுற்ற அடித்துவிட்டுத் தண்ணீரைத் தருகின்றீர்? இந்தத் தண்ணீர் குளத்தில் கிடைக்க மாட்டாதா?" என்று சலித்துக் கூறினான்.

அந்தப்பரமலோபிவெகுசாந்தமாக "அப்பா! கோபிக்காதே; நீ சொல்வதும் சரிதான். இது நேற்றுக் கொணர்ந்த தண்ணீர். சுத்தமான தண்ணீர் குளத்திலிருந்தே வேண்டுமளவும் குடிக்கலாம். ஐயோ பாவம் நீ என்ன செய்வாய். உனக்கு மெத்தப்பசி. இந்தத் தெருக் கோடியில்தான் குளமும் இருக்கின்றது. தாமதஞ் செய்யாமல் இந்த வழியே போய் குளத்திலே தண்ணீரைக் குடித்துவிட்டு அங்கேயே நிழலுமிருக்கின்றது. படுத்துத் தூங்கி சுகிக்கலாம்; இதுதான் குளத்திற்கு நேர் பாதை, போய் வா" என்று வாழைப் பழம் போல் இனிமையாகப் பேசி அனுப்பினான். பிச்சைக்காரன் வயிறு எவ்வாறு எரிந்திருக்கும் என்பதை எழுத வேண்டுமோ?

இத்தகைய லோபிகள் இருப்பது நிலத்துக்குச் சுமைதான்.

"தம்மை யண்டினர்க் கொன்று
ஈயார் இருந்தென்ன போயென்ன காண் கச்சி யேகம்பனே."

வினு விடை மணிகள்.

[ஆதி சங்கரர் அருளிச் செய்தது]

சேனுசோச்ய: புருஷ: ப்ரணதகளத்ரேண தீரவிபவேந
இஹ புவனே க: சோச்ய: ஸத்யபி விபவே ந யோ தாதா.

வினு:- எதனுல் மனிதன் துக்கமில்லாதவனுக விருப்பான்?

விடை:- வணக்கமுள்ள மனைவியாலும் நிலையுள்ள செல்வத்தாலும்.

வினு:- இவ்வுலகில் விசனிக்கப்படத் தகுந்தவன் எவன்?

விடை:- பொருளிருந்தும் கொடாதவன்.

ஓம் குஹாய நம:

கற்பு.

(248- வது பக்கத் தொடர்ச்சி)

"முகூர்த்த மேளம்; முகூர்த்த மேளம்" என்ற கூக்குரல் எழுந்தது. காது செவிடு படும்படி மேளங்கள் முழங்கின. மங்கல நாண் பூட்டியாயிற்று. மணமக்கள் அம்மி மிதித்து அருந்ததியை வணங்கி, அரசாணிக்காலை வலம் வந்து வணங்கினார்கள். பெரியோர்கள் வாழ்த்தினார்கள்; திருமண விருந்து இனிது நடந்தது. ஐந்து நாள் வரை கோலாகலமாக விருந்தது. கஜவல்லிக்கு சந்திராங்கதனைக் காண வேண்டுமென்ற பேரவா; சந்திராங்கதனுக்குந் தன் புது மனைவியைக் காண வேண்டுமென்ற காதல்; ஆனால், இருவருக்கும் நடுவில் நாணம் என்ற ஒரு திரையிட்டிருந்தது. இருவருக்கும் மணம் முடிந்த 10 நாள் வரை சுற்றத்தாரும் நண்பர்களும் ஒவ்வொருவராகப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். எந்நேரமும் ஆட்கள் நிறைந்திருந்ததால் இருவரும் தனித்துப் பேசவோ பார்த்து மகிழவோ முடியாமலிருந்தது. சஜவல்லி நல்ல பேரழகுடையவள்; பொன்னும் நாணும் நிறமுடையவள். அவளுடைய உடம்பில் இருந்த ஆபரணங்கள் அவள் இயற்கையழகுக்கு இடைஞ்சலாகவே இருந்தன. மணம் முடிந்து 15 நாள்கள் சென்றன. ஒரு நாள் மாலை நேரம்; மாடி மேல் வெட்டவெளியில் கஜவல்லி வீணையை மீட்டி இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். சந்திராங்கதன் தற்செயலாய் மாடிமீது ஏறினான். கஜவல்லியின் பாடலைக் கேட்டான்; அவள் குரலும் வீணையின் ஒலியும் கலந்து செவியில் அமிர்த தாரைபோற் புகுந்தது.

சிறிது நேரம் தேனுண்ட வண்டுபோல் சந்திராங்கதன் அசைவற்று நின்றான். சரஸ்வதி தேவிபோல் வீணாகானத்

துடன் இருக்குந் தன் காதலியை நோக்கிய சந்திராங்கதன் தன்னை மறந்து வேறு உலகத்தில் இருப்பதாக எண்ணினன். அவளுடைய அழகு, பாட்டு, வீணையின் இனிய நாதம், சந்திர ஒளி வீசும் காட்சி இவையத்தனையுஞ் சேர்ந்து அவனுடைய மனதில் ஒரு மட்டற்ற மகிழ்ச்சி வெள்ளம் கரைகடந்து பெருக்கெடுத்து ஓடலாயிற்று. அருகில் போய் மனைவியுடன் பேச எண்ணினன். காலெழும்பவில்லை. பாடிக்கொண்டிருந்த கஜவல்லி திரும்பி தன் கொழுநனைக் கண்டு நாணி வீணையை வைத்து விட்டு நாணத்துடன் தலைகுனிந்து கடைக்கண்ணால் அவனுடைய கெம்பீரமான கோலத்தைக் கண்டு புன்முறுவல் பூத்தாள். இதற்குள் கஜவல்லியின் தாயார் மாடிமேல் வந்து "அம்மா! இன்று வெள்ளிக்கிழமை யல்லவா? முருகர் கோயிலுக்குப்போவோம்; வா" என்று அழைத்தாள். மாமியைக் கண்ட சந்திராங்கதன், ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தவன் போல் தடுமாற்றமுற்று மாடியினின்று மிறங்கி வேறொருபுறஞ் சென்றான்.

கஜவல்லி தாயாருடன் அவ்வூர்க் கோடியிலுள்ள கந்தப்பெருமான் கோயிலுக்குப் போய் முருகனை வணங்கி, "எந்தையே! என் கணவனுக்கு ஆயுளும், அருளும், பொருளும், தந்து திருவருள் புரிவீர்" என்று வேண்டிக்கொண்டு வழிபட்டு வீட்டிற்கு வந்தாள்.

சந்திராங்கதனுக்குத் தந்தை இளமையிலேயே மண்ணுலகை நீத்தனர்; தாய் மட்டும் உண்டு. சந்திராங்கதன் இளமையிலிருந்தே பலவகையான துன்பத்திற்கு ஆளாகி, கல்வி பயின்றான். அவனுடைய சொந்தவூர் குகனூர் என்னும் சிறு ஊர். அந்த ஊரிலிருந்த ஒரு முதலாளியிடம் கணக்கு வேலை பார்த்து வந்தான். மாதம் 15 ரூபாய் சம்பளம். அவனுக்கு வயது 25. இந்த நிலையில்தான் திருமணம் நடந்தது. கஜவல்லி பிறந்த ஊர் நடு நாட்டில் செய்வளநல்லூர். செய்வளநல்லூரில் திருமணம் நடந்து ஒரு மாதமாயிற்று. சந்திராங்கதன் 10 நாள் லீவு எடுத்திருந்தான். கல்யாண மகிழ்ச்சியினாலும், மனைவியை உடனே அனுப்ப அவர்கள் இணங்காமையாலும், மனைவி மேல் வைத்த மட்டற்ற காத

லாலும் சந்திராங்கதன் மாமி வீட்டில் ஒரு மாதம் தாமதித்து விட்டான்.

தபால்காரன் ஒருநாள் சந்திராங்கதனிடம் ஒரு கடிதத்தைத் தந்தான். சந்திராங்கதன் பிரித்துப் படித்தான்.

திரு. சந்திராங்கதன் அவர்கட்கு. குகனூர்

பரிதாவி ஞு வைகாசிமீ 17உ

தாங்கள் குறித்த நாளில் வந்து சேராமையால். தங்கட்குப் பதிலாக வேறு ஆளை நியமித்துக் கொண்டோம்; தாங்கள் அதிகப் பற்றுக் கொண்டிருக்கும் ரூபாய் 150-ஐயும் உடனே அனுப்ப வேண்டியது; இன்றேல், தாவா செய்து கோர்ட்டுச் செலவுடன் வசூலிக்கப் படும்.

இப்படிக்கு
வங்கணச் செட்டியார்

சந்திராங்கதன் கடிதத்தைக் கண்டு கலங்கினான். "இறைவனே! கல்யாணமானவுடன் வேலை போய்விட்டதே; இனி என் செய்வேன்? 150 ரூபாயை எவ்வாறு தருவேன்? செந்தில் மேவிய கந்த நாயகனே! இளமையிலேயே தந்தையைத் தோற்றுத் தவித்தேன்; திருமணம் வேண்டாமென்றும் மறுத்தேன்; தாய் சொல் தட்டக் கூடாதென்று செய்து கொண்டேன். வயது தளர்ந்த தாயாரையும் மனைவியையும் எவ்வாறு காப்பாற்றுவேன்?" என்று ஏங்கினான். ஆருடனும் உரையாடவில்லை. கடமையைச் செய்ய அவன் உள்ளம் ஊக்கிற்று; தன் உயிரினுமினிய காதலி மேல் வைத்த காதல் தடுத்தது. காதல் சிறந்ததா? கடமை உயர்ந்ததா? என்று அவன் உள்ளத்தில் ஒரு போர் நிகழ்ந்தது. காதல் கடல் போல் அவன் உள்ளத்தில் பெருகி யிருந்தது. கடமை என்ற வடவைத்தீ அக்கடலை வற்ற வைத்தது. காதலினும் கடமையே சிறந்ததென்று துணிந்தான்.

அடுத்த நாள் காலையில் சந்திராங்கதனைக் காணப்படவில்லை. வழக்கம்போல் கஜவல்லி அதிகாலையில் எழுந்து நீராடி இறை வழிபாடு செய்து காலை உணவுக்குக் கணவனை எதிர்பார்த்து நின்றாள். நெடுநேரமாகியும் சந்திராங்கதனைக் காணாது திகைத்

தாள். கஜவல்லியின் தாய்தந்தைகள் மருகனைக் காணாது திகைத்து ஊரெங்குந் தேடினர். தேடியும் பயன் பெறவில்லை. கஜவல்லி அன்று பகல் முழுவதும் உணவு கொள்ளாமல் உள்ளம் உடைந்து இரவு வந்தபின் படுக்கையில் கிடந்து கண்துயிலாது வருந்துவாளாயினள். "வந்த வினை யகற்றும் கந்தக் கடவுளே! என் வினையிருந்தவாறு என்னே! திருமண முடிந்த ஒரு மாதத்திற்குள் கணவனைப் பிரியலாயிற்றே? என்குற்றமோ? என் ஆருயிர்க் கணவன் பிரிவதற்குக் காரணம் என்னேயோ? என்னுடன் சொல்லாமல் பிரிந்ததனால் என்மீது வெறுப்புற்றாரோ? எம்பெருமானே! கணவன் மனத்துக்கு மாறுபாடாகக் கனவிலும் நான் நடந்ததில்லையே" என்செய்வேன்? கற்புடை மடந்தையர் கணவனைப் பிரிந்து வாழ்வது முறையோ? அவருடைய குளிர்ந்த திருமுகத்தைக் காணும் நாள் என்றோ? அவருடைய அமிர்த மொழிகளைக் கேட்கும் நாள் என்றோ? என் வாழ்வு என்னாகுமோ? வள்ளிமணவாளா! நின் திருவடியைத் தவிர வேறு பற்றுக்கோடில்லாத என்னை யாள்வது நின் கடனே" என்று புலம்பினள். அம்மாதரசியின் துன்பத்தை நீக்குதற் பொருட்டு வருவான்போல் கதிரவன் உதய கிரியை நண்ணினன். இப்படி சில தினங்கள் கழிந்தன.

கஜவல்லி, மகனையின்றி வருந்தும் வயது தளர்ந்த மாமிக்கு பணிவிடை புரிந்து வாழ்வதே தனக்குச் சிறந்த அறமென்று எண்ணி தன் கருத்தை தாய்தந்தையரிடம் தெரிவித்து, அவர்கள் அதற்கு இணங்காது தடுத்தும், தன் கடமையைச் செய்வதே சிறந்த தென்றெண்ணி தாய் தந்தையரிடம் ஒருவாறு விடைபெற்றுக் கொண்டு, குகனூர் வந்து மாமியைப் பணிந்து தன் கணவன் திடீரென்று மறைந்ததனையுந் தெரிவித்து அவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு கணவன் திருவடியைச் சிந்தித்த வண்ணமாக இருந்தனள். ஆண்டுகள் பல சென்றன.

ஒருநாள் கஜவல்லி கணவனை நினைத்துக் கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றாள். கஜவல்லியின் மாமி "அம்மா! வருந்தாதே. கடவுளருளால் உன் கணவன் விரைந்து வந்து உன் கண்ணீரைத் துடைப்பான். கணவனோடு இன்புற்று வாழ அறுமுக வள்ளல் அருள் புரிவார்" என்று ஆறுதல் கூறிக் கொண்டிருக்கும் சமயத்தில் "அம்மா! இத்தனை அன்னம் போடுங்கள்" என்ற குரல் கேட்டது. கஜவல்லி ஒருதட்டில் அன்னத்தை எடுத்துக்கொண்டு வெளியில் வந்து அங்கே நின்ற பரதேசியின் திருவோட்டில் படைத்தாள். பரதேசி அன்னத்தை வாங்கிக்கொண்டு கஜவல்லியை உற்று நோக்கினான். அவன் தன்னை விறைக்கப் பார்ப்பதைக் கண்டு மனம் புழுங்கிய கஜவல்லி உள்ளே சரேலென்று சென்றனள். அந்தப் பரதேசி சற்று நேரம் நின்றுவிட்டு மனதைக் கஜவல்லி யிடத்தில் பறிகொடுத்து விட்டு வெற்றுடம்புடன் சென்று, அவ்வூர்ப் புறத்திலுள்ள ஓர் விநாயகர் கோயிலின் முன் மண்டபத்தில் இருந்தான். அவன் மனத்தில் எண்ணங்கள் பல மாறி மாறி வருவதும் போவதுமாக விருந்தன. அன்று மாலை கஜவல்லி அவ் விநாயகர் கோயிலுக் கருகிலுள்ள குளத்தில் தண்ணீரெடுக்க வந்தாள். அங்கு ஒரு கட்டழகன் அவளைக் கண்டு மயங்கித் தண்ணீரெடுத்துக் கொண்டு கரையேறும் அவளை வழிமறித்து நின்றான். அவள் ஒரு புறமாக ஒதுங்கிச் செல்லவும் அவ்வாலிபன் "பெண்ணரசே! நின் இளமை வறிதே கழிவது முறையன்று. என்னை விரும்பு. மறைந்து சென்ற நின் கணவன் வருவான் என்பதை மறந்துவிடு" என்று சொல்லிக் கொண்டு அவளைத் தீண்டச் சென்றான். அக்கற்பரசி "அண்ணே! நான் பிறன் மனைவி; என்னைத் தொடாதே; தொட்டு பழி பாவத்துக் காளாகாதே." என்று கூறிப் பதறிய உடம்பினளாய் ஓடித் தன் வீட்டை யடைந்தனள். அவ்வாலிபன் மீளவும் பரதேசி வடிவத்துடன் இரவு 8-மணிக்கு மேல் கஜவல்லியின் வீட்டு புறந் திண்ணையில் படுத்துக் கொண்டு உள்ளே நிகழும் நிகழ்ச்சியைக் கவனிப்பானாயினான். கஜவல்லி ஒரு மூலையில் இருந்து, "எம்

பெருமானே! வருடங்கள் பல சென்றும் என் கணவர் வந்தாரில்லை. அவர் இருப்பிடமும் தெரியவில்லை. வயது சென்ற மாமியுடன் இப்படி எத்தனை நாள் உணவுக்கும் உடைக்கும் துன்புற்றிருப்பேன் கருணாநிதே! நின் சித்தமிரங்கி எனக்கு மரணத்தை உண்டுபண்ணினாலும் இனிதாக இருக்குமே" என்று புலம்பிக் கொண்டிருந்தாள். அவளுடைய மாமி மருகியின் துன்பத்தைக் கண்டு தானும் புலம்பி "அம்மா! அழாதே. ஆண்டவன் உனக்கு அருள் செய்வார்" என்றாள். கஜவல்லி மாமியின் கால்மேல் விழுந்து, "மாமி! இளம் வயதில் நான் என் தீவினை வசத்தால் கணவனைக் கல்யாணஞ் செய்து கொண்ட ஒரு மாதத்திற்குள் பிரிந்து துன்பக்கடலில் வீழ்ந்தேன். காலையில் பிச்சைக்கு வந்த ஒரு பரதேசி என்னை உற்றுப்பார்த்ததும், மாலை தண்ணீருக்குச் சென்றவிடத்தில் ஒரு வாலிபன் என்னைத் தொட்டிழுக்க வந்ததும் நினைக்க, இன்னும் யான் இவ்வுலகில் உயிரோடு உறைவதில் பயனில்லை" என்று தேம்பித் தேம்பிக் கண்கலுழ்ந்தாள். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பரதேசி "அம்மா! அம்மா!!" என்று கதவைத் தட்டினான். உடனே கிழவி "அம்மணி! நின் கணவன் வந்து விட்டான்; கதவைத் திற" என்றாள். கஜவல்லி உள்ளம் பூரித்து ஓடிக் கதவைத் திறந்தாள். காலையில் கண்ட பரதேசியைக் கண்டு திகைத்து அசைவற்று நின்றாள். பரதேசி தன் தாய் கால் மேல் விழுந்தான். அவள் மகனை யெடுத்து அணைத்து அழுதாள். கஜவல்லி அவனைத் தன் கணவன் என்றுணர்ந்து அவன் கால்மேல் விழுந்து கண்ணீரால் அவன் திருவடித் துகளை அலம்பினாள். கிழவி, "மகனே! நீ இவ்வாறு பரதேசியானதற்குக் காரணம் என்னை?" என்று வினவினாள்.

சந்திராங்கதன் உடனே அக்கோலத்தை மாற்றிச் சிறந்த ஆடையாபரணங்களுடன் விளங்கினான். கஜவல்லி கணவன் பேரெழிலைக் கண்டு பெருமிதமுற்று, "பிராணேச! மாலையில் குளக்கரையில் வழிமறித்தது நீங்களே போலும் என்று அவனைத் தழுவினாள். சந்திராங்கதன் கடனை நிவர்த்திக்கும் பொருட்டு தான் கடல் கடந்து வேறு தேசஞ் சென்று கணக்கற்ற செல்வங்களை ஈட்டி வந்த வரலாறுகளைக் கூறி தாயையும், மனைவியையும் மகிழ்வித்துத் தான் கொணர்ந்த வரம்பற்ற நிதிகளைத் தாயிடங் கொடுத்தான். கஜவல்லியும் சந்திராங்கதனும் தனியிடத்தி லிருந்து அன்றிரவைக் கழித்தார்கள். சந்திராங்கதன் காலைக் கடனை முடித்துத் தான் முன்னிருந்த முதலாளியிடஞ் சென்று கொடுக்கவேண்டிய முதலையும் வட்டியையுங் கொடுத்து விட்டு வீடு சேர்ந்தான். கஜவல்லி யிருந்த கூரைவீடு பொன்மாளிகை யாயிற்று. அவளுடைய உடம்பை வயிரநகைகள் மறைத்தன. பல ஏவலாளர்கள் ஏவல்கேட்பா ராயினர். கற்பின் மிக்க அவள் ஏழாவது மாடியில் கணவனுடன் என்றும் பிரியாது அவன் திருவடியை வருடி இன்புறுவாளாயினாள்.



உ

ஓம் குஹாய நம :

திருஞானசம்பந்தர் தேவாரம்

திருச்சோற்றுத்துறை — பண் — தக்கராகம்

(192-ம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சிற்றம்பலம்.

மாந்தர், பேரின்பத்தை அருளே துணையாகக் கொண்டு நுகரவேண்டுதலின், அருளே துணையாக வென்றார். இதனாலே சதசத்தாகுமுயிர் உலகத்தைச் சார்ந்து சிற்றின்பமும் அருளைச் சார்ந்து பேரின்பமு மடைதற்குரியதன் றென்பது குறிப்பிடப் பட்டது. முதலாவது ஒப்பரென்ற சொல் ஒத்து ஒழுகுவோ ராகிய மாந்தர் என்ற பொருளிலும், இரண்டாவது ஒப்பரென்ற சொல் ஏற்றுக்கொள்ளுபவராகிய சிவபெருமான் என்ற பொருளி லும் வந்தது. சிவபெருமான் தனது திருமேனியில் அணியும் வெண்ணீறு அருளொளிக்கு அடையாளமாக விருத்தலின் ஒளி கொள் வெண்ணீறு என்றார். அதனை அங்ஙனம் அவர் அணிவது தன்னை அன்புடன் வழிபடும் அடியார்களுடைய வினைவலியை நீக்குதற் பொருட்டாகும். "துணை மலர் கொய்து தொழுதெழு வார் வினை வளம் நீறெழ நீறணியம்பலவன்" என்று மாணிக்க வாசக அடிகள் திருக்கோவையார் 118-வது பாட்டில் கூறி யிருத்தல் காண்க. சிவநேயர்கள் வெண்ணீற்றைத் தங்கள் உடம் பில் அணிவதும் அது குறிக்கிற அருளை மறவாது நினைந்து அதன் வழியொழுகி மலத்தை யொழித்தற் பொருட்டேயாகும். அப்பர் என்றதனாலே தன்னை அன்புடன் தொழுகிறவர்களை அவர்களுக்குத் தந்தையாரென்ற முறையில் சிவபெருமான் ஏற்றுக் கொள்ளுகிறார் என்பது பெறப்பட்டது. அடிகள் தமது நெஞ்சைப் பிரித்து ஒரு பொருளாகத் தம்மோடுளப் படுத்தி அடைவோம் என்று பன்மையிற் கூறினார். இதனால் ஒருவர் தமது நெஞ்சு உகவாது சிவபெருமானைத் தொழுதலால் பயனில்லை யென்பது குறிப்பிடப் பட்டது. அடிகள் இந்தத் தேவாரச் செய்யுளை இல்வாழ்க்கைக்குரிய அறநெறியில் வாழ்ந்து உலகச் சிற்றின்பம் நுகர்ந்து அவ்வின்பத்தைப் பொய்யென்று கண்டு கழித்து பேரின்ப நாட்டமடையும் பக்குவம் வந்த ஒருவருக் குக் கூறிய அறவுரையாகத் தம்மேல் வைத்துக் கூறினார்.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை,

சிந்துபூந்துறை.